**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.169** **நாள் : 04.10.2024**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் கொசு ஒழிப்புப் பணிக்காக ரூ.67 இலட்சம் மதிப்பில் கூடுதலாக கையினால் இயக்கும் 100 புகைப்பரப்பும் இயந்திரங்களை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், களப்பணியாளர்களுக்கு இன்று வழங்கினார்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் கொசு ஒழிப்புப் பணிக்காக ரூ.67 இலட்சம் மதிப்பில் கூடுதலாக கையினால் இயக்கும் 100 புகைப்பரப்பும் இயந்திரங்களை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், களப்பணியாளர்களுக்கு இன்று (04.10.2024) ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

**பின்னர், மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள மழைநீர் வடிகால்களில், முதற்கட்டமாக 792 கி.மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால்கள் தூர்வாரும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 1152 கி.மீ. நீளத்திற்கு நடைபெற்று வரும் தூர்வாரும் பணி 10.10.2024க்குள் முடிக்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் 53.42 கி.மீ. நீளமுள்ள 33 நீர்வழிக் கால்வாய்களில் 2 ஆம்பிபியன், 3 மினி ஆம்பிபியன், 6 ரோபொடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள் மூலம் ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மொத்தமுள்ள 1 இலட்சத்து 9 ஆயிரத்து 395 எண்ணிக்கையிலான வண்டல் மண் சேகரிக்கும் தொட்டிகளில் (Silt catch Pit) தற்பொழுது 73,180 வண்டல் மண் சேகரிக்கும் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள் 10.10.2024க்குள் முடிக்கப்படும்.

2021 முதல் 2024 வரை 784.96 கி.மீ. நீளத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டுள்ளது. மேலும், கொசஸ்தலையாறு, கோவளம் வடிநிலப் பகுதிகளில் 350 கி.மீ. நீளத்திற்கு ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் கட்டப்பட்டு வருகிறது.

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பருவமழை முடியும் வரை அவசரப் பணிகள் தவிர சாலை வெட்டுப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்றிட பல்வேறு திறன் கொண்ட 990 மோட்டார் பம்புகள் தயார் நிலையில் உள்ளன. 162 நிவாரண மையங்கள் தயார்நிலையில் உள்ளன. விழுந்த மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்ற 280 மரம் அறுக்கும் இயந்திரங்கள் தயார்நிலையில் உள்ளன. சிந்தாதிரிப்பேட்டை மற்றும் கோபாலபுரத்தில் உள்ள பொது சமையற் கூடங்களில் மணிக்கு 1500 நபர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் தயார் செய்யும் வகையில் தயார் நிலையில் உள்ளது.

ஒவ்வொரு வார்டுகளிலும் புயல் மற்றும் மழைநீர் அகற்றும் அவசரப் பணிகளுக்கு 5 நபர்கள் தற்காலிகமாக பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். பொதுமக்களிடமிருந்து மழைத் தொடர்பான புகார்களை பெற்று உடனடி நடவடிக்கை எடுக்கும் வகையில், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் *(ICCC-Integrated Command and Control Centre) 24x7* இயங்கி வருகிறது.

*15* மண்டலங்களுக்கும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் (IAS Officers) கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு, கடந்த *2* நாட்களாக நடைபெற்று முடிந்த மழைநீர் வடிகால் பணிகள், நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை கண்காணித்து வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் *16* சுரங்கப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் *6* சுரங்கப்பாதைகள் ஆகியவற்றில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற, மோட்டார் பம்புகள் மற்றும் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள *300* சுகாதார மையங்கள் மற்றும் மருத்துவமனைகளில் மழைக்காலத்திற்கு தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளன. மழைக்காலங்களில் கூடுதலாக மருத்துவ முகாம்கள் நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொசுக்களால் பரவும் நோய்த்தடுப்பு பணிக்காக நிரந்தர மற்றும் தற்காலிகப் பணியாளர்கள் என *3,368* களப்பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்காக *319* மருந்து தெளிப்பான்கள், *54* பவர் ஸ்ப்ரேயர்கள், பேட்டரி மூலம் இயங்கும் *156* ஸ்ப்ரேயர்கள், *324* புகைப்பரப்பும் இயந்திரங்கள், வாகனங்களில் பொருத்தப்பட்ட *64* புகைப்பரப்பும் இயந்திரங்கள் மற்றும் *6* ட்ரோன் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அதிக மழைநீர் தேங்கும் இடங்கள் கண்டறியப்பட்டு, எதனால் அந்த இடத்தில் மழைநீர் தேங்கியது எனக் கண்டறிந்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் போதுமான அளவில் மோட்டார் பம்புகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திரு.க.தனசேகரன் (கணக்கு), பாலவாக்கம் திரு.த.விசுவநாதன் (கல்வி), துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., திரு.எம்.பிருதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், தலைமைப் பொறியாளர் (பொது) திரு.எஸ்.ராஜேந்திரன், தலைமைப் பூச்சித்தடுப்பு அலுவலர் முனைவர் எஸ்.செல்வகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**